DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 03/2025 |
| Deposition of witness | : | P. W - 4 |
| Name | : | மணிவண்ணன் |
| Father's /Husband Name | : | வடிவேல் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 64 |
| Occupation | : | டீக்கடை ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 23rd day April, 2025.
A1 to A3 Present.

**முதல் விசாரணை:-**

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பத்தை கடந்த 01.11.2024ம் தேதி மாலை 07.00 மணியளவில் நன்னிலம் கால்நடை மருத்துவமனை அருகே நன்னிலம் போலிசார் மூவேந்தனை சீனிவாசன் தாக்கியது தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து என்னிடமும், மணிகண்டன் என்பவரிடமும் சாட்சிகளாக கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி என்னுடைய சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சம்பவத்தின் போதும் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அழைப்பாணையில் உள்ள கையொப்பத்திற்கும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்திற்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறதா என்றால் சரியல்ல எந்த வித்தியாசமும் இல்லை இரண்டு கையொப்பத்தையும் நான் தான் செய்தேன். திலக், தமிழ்ச்செல்வன்

ஆகியோர்கள் எனது பங்காலிகள். நான் இவ்வழக்கு தொடர்பாக காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன் ஆனால் என்னை உள்ளே அனுமதிக்கவில்லை. நான் எதற்காக கையொப்பம் செய்தேன் என்றால் வரைபடம் வரைவதற்காக கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. எனது பெயர், எனது தந்தையின் பெயரை போலிசாரிடம் யார் கூறினார்கள் என்றால் நான் தான் கூறினேன். போலிசார் டீக்கடையில் விசாரித்து தெரிந்துக்கொண்டார்கள். மாலை 5 அல்லது 6 மணியளவில் எனது பெயரை குறித்துக்கொண்டார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.04.23 14:53:35 +0530